## IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

## MCOP. No. 125/2015

Deposition of RW1 solemnly affirmed under Provision Oaths Act 1969(Act 44 of 1969), the 10th day of November 2022.

| Name: | செந்தில் குமார் | Religion | இந்து |
|---|---|---|---|
| Father Name: | பழனிசாமி | Caste | வன்னியர் |
| Village: | கலர்பட்டி, எடப்பாடி | Calling | காவலர், எடப்பாடி காவல் நிலையம். |
| Taluk: | எடப்பாடி | Age | 32 |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அனுப்பபட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜராகி 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை :**

நான் இந்த மனுவில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் தற்போது எடப்பாடி காவல் நிலையத்தில் காவலர் எண். 2285 பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் எடப்பாடி காவல் நிலைய குற்ற எண் 39/2015 வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதா? அல்லது தீர்ப்புரை பகரப்பட்டதா? என்பது குறித்த விவரங்களின் அசல் சான்றிட்ட உண்மை நகலுடன் சாட்சியமளிக்க கோரப்பட்டது. மேற்படி வழக்கின் சிடி வைல் கொண்டு வந்துள்ளேன். மேற்படி வழக்கு கோப்பில் இறுதி அறிக்கை உள்ளது. அதில் மனுதாரரே இந்த விபத்தினை ஏற்படுத்தி கொண்டதாக விசாரணையில் தெரிய வந்ததாக குறிப்பிட்டு சங்கதிகளை பொறுத்த மட்டில் பிழை (Mistake of Fact) என்று கூறி முடிக்கப்பட்டுள்ளது. அதன் அசல் மற்றும் நகல் எங்களது சிடி வைலிலே உள்ளது. அந்த இறுதியறிக்கையின் அசல் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்தது உண்மை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி சைலோ காரின் ஓட்டுநர் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளார். நான் கொண்டு வந்த சி டி வைலில் முதல் தகவல் அறிக்கையை தவிர மற்ற அனைத்து அசல் ஆவணங்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி MF செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் காரருக்கு RCS நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டுள்ளதா? என்றால் அது எந்த தேதியில் சார்வு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எங்களது வழக்கு கோப்பில் உள்ள RCS நோட்டீசில் மனுதாரரின் கையொப்பம் தவிர மற்ற விவரங்கள் நிரப்பப்பட வில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் மனுதாரர் தரப்பில் ம.சா.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்தின் மற்றொரு RCS நோட்டீஸ் P14

நிரப்பப்படாததாலும் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுன் குறியீடு செய்யப்படுகிறது. ம.சா. 14 ல் காவல் உதவியாளர் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் உள்ள மாதிரி வரைபடத்தின் படி சம்பவ இடம் வாகனங்களை நிறுத்தும் பகுதி அல்ல என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் 25.02.2015 ம் தேத காவல் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தேதியிலிருந்து இன்றைய தேதி வரை அசல் ஆவணங்கள் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரிதான். குற்றவியல் நடுவர் நீதித்துறை நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு Mistake of Fact என்று முடிக்கப்பட்டால் மட்டுமே வழக்கு முடிக்க முடியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் சைலோ காரின் அஜாக்கிரைதான் விபத்திற்கு காரணம் என்று தெரிய வருவதால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நான் கொண்டு வந்த சிடி வைலில் எத்தனை இறுதி அறிக்கை அசல் ஆவணங்கள் உள்ளன என்றால் 2 உள்ளன. மனுதாரர் கௌதம் இந்த வழக்கு முடிக்கப்பட்டது குறித்து ஏதாவது ஆட்சேபணை கூறியுள்ளாரா? என்றால் இல்லை.

**மறுகுறுக்கு விசாரணை**

மனுதாரர் RCS நோட்டீஸ் சர்வ் செய்யப்படாததால் அவரால் ஆட்சேபணை தெரிவிக்க இயலாது என்று சொன்னால் அவருக்கு RCS நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டுள்ளது ஆனால் தேதிதான் குறிப்பிடவில்லை. உண்மையிலே அவருக்கு RCS நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டிருந்தால் அந்த தேதி சிடி வைலில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

Sd/- செந்தில்குமார்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.